Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 25 [07 - 02 - 1993] ஞாயிற்றுக்கிழமை ஓசை 355

வதிவிட வேளாண்மை; உடன் விண்ணப்பிக்கவும்

வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தவும், 1992/93 காலப் பகுதியிலே யாழ். குடாநாட்டுக்கு உட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்கும்முகமாகவும் 2-வது முறையாக வதிவிட வேளாண்மைப் போட்டியினை ஆர்வமுள்ள நிறுவனங்களுடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடாத்தவுள்ளது. உற்

(6ஆம் பக்கம் பார்க்க)

தெரிவுக் குழு தீர்வுத்திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

இறுதி அறிக்கை தயாரிப்பிற்குமுன் மீண்டும் ஒரு முறை குழு கூடலாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை தயாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது, இருப்பினும், இறுதி அறிக்கையை தெரிவுக்குழு சமர்ப்பிக்கமுன் மீண்டும் ஒரு முறை கூடலாம் எனவும் அறியமுடிகின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட மங்களமுனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை விரைவில் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யவிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் ஒரு முறை கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கைக்கான கடைசித் திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது தீர்வு திட்டமாக ஒன்பது மாணங்களுக்கும் தனித்தனியான சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பு முறையை சிபார்சு செய்யவுள்ளதாகநம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இத்தீர்வுத் திட்டத்திற்கு சிங்களவர் தரப்பில் ஓரளவு ஆதரவு இருப்பினும், தமிழர் தரப்பில் ஆதரவு கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட கொழும்பிலுள்ள அநேக தமிழ்குழுக்கள் கூட வடக்கு-கிழக்கு இணையாத இத்தீர்வுத் திட்டத்தை ஏற்பதற்கில்லை என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் கறுப்பு நரி - 4 முடிவு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த போது கறுப்பு நரி நான்கு என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், விமானப்படையின் ஒத்துழைப்புடன் முன் யிரம் படையினர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் கூறியுள்ளது.

ஜனவரி 31 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கை முடிந்துவிட்டதாகவும் ஊரடங்கு நீக்கப்பட்டதையடுத்து வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் சுமார் ஐந்நூறு தமிழர்வரையில் படையினர் வசம் சிக்கியிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

கேணல் கிட்டு நினைவு நிகழ்வு

முத்த தளபதி கேணல் கிட்டு உட்படபத்து மாவீரர்களுக்கான நினைவு நிகழ்வு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் புலோலி மத்தி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மூன்றலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின்போது வடமராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் தருபாஸ்கரன், பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. வைந்தமிழன் மற்றும் பலர் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றுவர். (யோ)

கத்தோலிக்க ஆலயம் தென்பகுதியில் தீக்கிரை

தென்னிலங்கையில் உள்ள வாலணகோத என்னும் கிராமத்தில் கத்தோலிக்கர் செயம் செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த குடிசை ஒன்று இங்குள்ள வேறு சமயத்தை பின்பற்றுவோரால் தீயிடப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குடிசைக்குரிய நிலப்பரப்பு இங்குள்ள கத்தோலிக்கர் ஒருவரால் ஆலயம் அமைப்பதற்காக விலைக்கு வழங்கப்பட்டதாகவும், இவ்விடத்தின் அருகாமையில் இளம் பெண்களுக்காக ஒரு சமூகப் பணிமையம் கட்டுவதற்கு அதிகாரிகள் அனுமதிகளித்திருந்தும், இங்குள்ள புத்தமதத் துறவிகளின் செல்வாக்குக் காரணமாக இக்கட்டடப் பணிகூட காவல்துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(17)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட பெண்கள் இராணுவத்தால் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஊறக்கொண்டாஞ்சேனை கிராமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நான்கு அப்பாவிப் பெண்களை கைது செய்து சித்திரவதை செய்து விசாரணை செய்தபின் விடுதலை செய்துள்ளார்கள்.

கடந்த 27 ஆம் திகதி சந்திவெளி, கிரான்துறை ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் சந்திவெளியைச்சேர்ந்தவர்களான சீனித்தம்பி கருணையம்மா, பொன்னையா தங்கமணி, பொன்னையா கோமளம், பொன்னையா தேவம்மா ஆகியோரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்று விசாரணை செய்து மறுதினம் மொட்டை அடித்து விடுதலை செய்துள்ளனர்.

நிவாரண பொருள்கள் வழங்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான கடந்த மாதத்திற்குரிய இருவார உலர் உணவு விநியோகம் மேலும் தாமதமாகலாம் என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமண'

(6ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு

பாலியல் வன்முறை

அத்தியாவசிய சேவைகளுக்கு அரசு திட்டமிட்டு கடை

பட்டதாகவும் கூட்டுப்படைத் கூறப்படுகிறது.

கேணல் கிட்டு நினைவு நிகழ்வு

முத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கான நினைவு நிகழ்வு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் புலோலி மத்தி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின்போது வடமராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. வைந்தமிழன் மற்றும் பலர் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றுவர். (யோ)

கத்தோலிக்க ஆலயம் தென்பகுதியில் தீக்கிரை

தென்னிலங்கையில் உள்ள வாலணகோத என்னும் கிராமத்தில் கத்தோலிக்கர் செயம் செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த குடிசை ஒன்று இங்குள்ள வேறு சமயத்தை பின்பற்றுவோரால் தீயிடப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குடிசைக்குரிய நிலப்பரப்பு இங்குள்ள கத்தோலிக்கர் ஒருவரால் ஆலயம் அமைப்பதற்காக விலைக்கு வழங்கப்பட்டதாகவும், இவ்விடத்தின் அருகாமையில் இளம் பெண்களுக்காக ஒரு சமூகப் பணிமையம் கட்டுவதற்கு அதிகாரிகள் அனுமதியளித்திருந்தும், இங்குள்ள புத்தமதத் துறவிகளின் செல்வாக்குக் காரணமாக இக்கட்டடப் பணிகூட காவல்துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (17)

இறுதி அறிக்கை தயாரிப்பிற்குமுன் மீண்டும் ஒரு முறை குழு கூடலாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை தயாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது, இருப்பினும், இறுதி அறிக்கையை தெரிவுக்குழு சமர்ப்பிக்கமுன் மீண்டும் ஒரு முறை கூடலாம் எனவும் அறியமுடிகின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட மங்களமுனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை விரைவில் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யவிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் ஒரு முறை கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கைக்கானகடைசித் திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது தீர்வு திட்டமாக ஒன்பது மாணங்களுக்கும் தனித்தனியான சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பு முறையை சிபார்சு செய்யவுள்ளதாகநம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இத்தீர்வுத் திட்டத்திற்கு சிங்களவர் தரப்பில் ஓரளவு ஆதரவு இருப்பினும், தமிழர் தரப்பில் ஆதரவு கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட கொழும்பிலுள்ள அநேக தமிழ்குழுக்கள் கூட வடக்கு-கிழக்கு இணையாத இத்தீர்வுத் திட்டத்தை ஏற்பதற்கில்லை என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

கைது செய்யப்பட்ட பெண்கள் இராணுவத்தால் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஒறக்கொண்டாஞ்சேனை கிராமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நான்கு அப்பாவிப் பெண்களை கைது செய்து சித்திரவதை செய்து விசாரணை செய்தபின் விடுதலை செய்துள்ளார்கள்.

கடந்த 27 ஆம் திகதி சந்திவெளி, கிரான்துறை ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் சந்திவெளியைச்சேர்ந்தவர்களான சீனித் தம்பி கருணையம்மா, பொன்னையா தங்கமணி, பொன்னையா கோமளம், பொன்னையா தேவம்மா ஆகியோரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்று விசாரணை செய்து மறுதினம் மொட்டை அடித்து விடுதலை செய்துள்ளனர்.

நிவாரண பொருள்கள் வழங்குவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான கடந்த மாதத்திற்குரிய இருவார உலர் உணவு விநியோகம் மேலும் தாமதமாகலாம் என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமண'

(6ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு

2-ம் லெப். தங்கப்பன் (விஷ்ணு)

திருமலை புல்மோட்டை சிறிலங்கா இராணுவ ரோந்து அணிமீது 18-01-1993 ல் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப்புலிகள் போராளி 2-ம் லெப்டினன்ட் தங்கப்பன் விஷ்ணு (முருகப்பன் ஜெயச்சந்திரன்சீனன்குடா, திருக்கோணமலை 05-02-93 அன்று இரவு 10 00 மணியளவில் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பாலியல் வன்முறை மரணதண்டனை விதிப்பு

பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒருவருக்கு புத்துவெட்டுவான் ஐயன்குளம் என்னும் இடத்தில் வைத்து நேற்று முன்தினம் மகல் 11.00 மணியளவில் விடுதலைப் புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

மூன்று திருமணங்களை முடித்து ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையான சின்னப்பு சின்னராஜா (வயது 39 - 5 ஆம் கட்டை குஞ்சுப்பரந்தன்) என்பவர் பருவமடைந்த 13 வயதுச் சிறுமி மீது பாலியல் வன்முறையைப் பிரயோகித்தார் எனவும் பின்னர் இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ள முன்றார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்

[6 ஆம் பக்கம் பார்க்க]

அத்தியாவசிய சேவைகளுக்கு அரசு திட்டமிட்டு தடை

யாழ். செயலக அதிகாரிகள் கருத்து

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் சீரற்ற நிலையில் வைத்துப் பேணுவதற்கு சிறிலங்கா அரசு திட்டமிட்டு செயலாற்றி வருவதாக யாழ் செயலக அதிகாரிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் வாழும் அனைத்து மக்களுக்குமான மிகவும் அத்தியாவசியமான சேவைகளை அரசு திட்டமிட்டுக் கட்டுப்படுத்தி வருகிறது. அல்லது முற்றாக நிறுத்தி விடுகிறது இவ்வாறான தனது செயல்களுக்கு அரசின் உயர் அதிகாரிகள், சில ஏற்றுக் கொள்ள முடியாத போலிக் காரணங்களை அவ்வப்போது கூறிவருவது வழக்கமாகி விட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது உணவு விநியோகம், மருந்துப் பொருள்களின் விநியோகம், மருத்துவ சேவை, மாவட்டத்திற்குள்ளேயும், வெளியேயுமான போக்கு வரத்து சேவை, வங்கிகளின் சேவை மற்றும் கல்வி, விவசாயம் ஆகியதுறை

[6 ஆம் பக்கம் பார்க்க]

மீட்புநிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 9 30 மணி தொடக்கம் 10 00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

சர்வதேச பாடசாலையினால் இலவச கல்விக்கு ஆபத்து

கொழும்பு பத்திரிகை எச்சரிக்கை

[கொழும்பு]

சர்வதேச பாடசாலைகளை இலங்கை முழுவதும் அமைப்பதன் மூலம் பிரேமதாசா அரசாங்கம் இலவச கல்விக்கு வேட்டுவைக்க முயல்வதாக கொழும்பு பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

இவ் வருடத்தில் 82 சர்வதேச பாடசாலைகளை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இப்பாடசாலைகளில் சுமார் 20, 000 பேர் கல்விகற்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது சர்வதேச பாடசாலை 'கொழும்பு சர்வதேச பாடசாலை' என்ற பெயருடன் இல 27, கிரகரி வீதியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பாடசாலையில் ஆண்டு ஒன்று தொடக்கம் 13 வரை சுமார் 850 மாணவர்கள் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பதாகவும், இங்கு அனுமதிக்கட்டணமாக ரூபா அறுபதினாயிரமும், தவணைக் கட்டணமாக ரூபா இருபத்தையாயிரமும் அறவிடப்படுவதாகவும் தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

உளவாளிகள் !!!
அவதானமாக இருக்கவும்..!
உங்களோடு வருபவர் உளவாளியாகவும் இருக்கலாம்!

வரி விளம்பரம்

மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தர வாதத்துடன் குறித்தநேரவண யில் ஒருருக்கு சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை நேரில் வரவும். கோவிந்தபிள்ளைவிஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெரு மாள் கோவிலடி, யாழ்ப் பாணம். (4211)

அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனார்

எம்மிடம் ரேடியோ, மணிக் கூடு திருத்தும் வாடிக்கை யாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்டிக்கர் இனா மாக வழங்கப்படும். டிக்கா வாச் ஸ்ன்ட் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வான வில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் வடிவாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர் கள்.) (சி-5918)

வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், வேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் சான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பா ணம். (சி-5924)

பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில்/இந்துக்கல்லூரி எதிரில் கே.கே.எஸ் வீதி கொக்குவில். பா.நே திங்கள் 4 பி.ப.- 6 பி.ப, ஞாயிறு: 10மு.ப - 12 ந.ப. (சி-4058)

மாணவர்களுக்கு சலுகை

எமது தையல் நிலையத்தின் 10-வது ஆண்டை முன்னிட்டு மாணவர்களுக்கான சிருட்டை தையல் கலியில் 20% கழிவு (சோட்ஸ் & சேட்ஸ்) முந்துங் கள் "ஜெகபதி தையலகம்" அந்தோனியார் கோவிலடி மானிப்பாய். (4059)

பரீட்சை(ஆண்டு 4,5)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீ ட்சை ஆண்டு 4 ஆண்டு 5, வகுப்புகளுக்கு 07.02.93 ஞாயிறு மு.ப.8.00 மு.ப11.00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4221)

சமய அறிவுப் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ சற்குண விநாயகர் தேவஸ் தான சைவசமய அபிவிருத்தி கழகத்தினரால் நடாத்தப்படும் "சைவசமய அறிவுப் பரீட்சை" இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், யாழ். இந்துக்கல்லூரி, யாழ். வைத்தீஸ்வராகல்லூரி, யாழ் இணுவில் மத்திய கல் லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறு கின்றது.

இப்பரீட்சைக்கு 1-ம் ஆண்டு தொடக்கம் 13-ம் ஆண்டு வரையுள்ள மாணவர்களுக்கு நடைபெறுகின்றது.

பண்பாட்டுக்கழக கூட்டம்

(வேலணை)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளை யின் கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இல 33 பருத்தித் துறை வீதியில் உள்ள நிலைய அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (14)

இலவச பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை கல்வித் கோட்ட பாடசாலை மாணவர்களின் இலவச பாடநூல்கள் கடந்த வெள்ளிக் கிழமை கோயிலடி யில் உள்ள வேலணை கல்வித் கோட்ட அலுவலகத்தில் விநி யோகிக்கப்பட்டன.

இதேவேளை தெற்புலி பண் டிதர் குடியிருப்பில்உள்ளதிவ மாணவர்களுக்கான பாட நூல்களும் கடந்த வெள்ளிக் கிழமை கூட்டுறவுச் சங்க வாக னம் ஒன்றின் மூலம்அனுப்பி வைக்கப் பட்டதாக தெரிவிக் கப்படுகிறது. [22]

இராணுவத்தால் கைதானோரின் குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா படைகளால் கைது செய்யப்பட்ட குடும்பத் தலைவர்களின் குடும்பங் களுக்கு இலவசச் சென்றுவ வசதி சங்கம் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வரு கிறது.

அண்மைக்கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது சிறிலங்கா முப்படைக ளாலும் கைது செய்ய பட டுத்தி வைக்கப்பட்டுள்ள, காணாமல் போன உழைப் பாளிகளால் வருமானம் இழந் துள்ள குடும்பங்களுக்கே இவ் உலர்உணவு விநியோகிக்கப் படுகிறது.

வாழ். அரசாங்க அதிபர் அரசசார்பற்ற நிறுவனங்க ளின் இணையத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இதன் செயற்பாடுகளை இலங்கைச்செஞ்சிலுவைச் சங் கம் இவ் உலர்உணவை வழங்கி வருகிறது.

டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலையான கைதிகள் சந்திக்க மறுத்ததை அடுத்து டக்ளஸ்தேவா திரும்பிச் சென்ற சம்பவம் நேற்று முன் தினம் பலாலியில்நடைபெற் றது மேற்படிசம்பவம் பற்றி நேற்று முன்தினம் விடுதலை யானசுசைப்பிள்ளைஎன்பவர் விளக்குகையில் விடு தலை செய்யப்பட்ட 20 பேரும் தனியான ஓர் இடத் தில் வைக்கப்பட்டிருந்தோம். அப்போது அங்கு வந்த சிறி லங்கா இராணுவ அதிகாரி களில் ஒருவர் "உங்களை சந் திக்க ஈபிடிபி தலைவர் டக்ளஸ்தேவானந்தா வந்துள் ளார். அவர் உங்களுடன் உரையாட விரும்புகின்றார்" என்றார்.

அப்போது இதைக்கேட்ட நாம் அனைவரும் ஒரே குர லில் எமது உயிர் போனாலும் நாம் அவரை சந்திக்க போவ தில்லை. அவருடன் உரையா யாடக்கூடிய நிலையில் நாம் இல்லை. தயவுசெய்து எம்மை வற்புறுத்த வேண்டாம் என் றோம். இதைக்கேட்ட அவ் அதிகாரி புன்முறுவலுடன் "நான் உங்களை வற்புறுத்த வில்லை. இது உங்கள் விருப் பம்" எனக்கூறிவிட்டுச் சென் றார் எனக்கூறினார்.

மறவர் போரில் கலந்த மகனின்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்

1967 - 09 - 26

தமிழ் மடியில்

1990 - 02 - 07

2-ம் லெப். நேகன்

(திருநாவுக்கரசு சிவஞானன்)

அன்னை வயிற்றினில் குடியிருந்து
அடுத்து வந்து அவனியில் பிறந்தாயே!
தன்னை நாடும் தமிழ் ஈழ மண்ணை
தரணியில் மீட்க தானே வந்தாயே!
பண்பும் பாசமும் நிறைந்த உன்னை
பாரினில் மறக்க முடியுமா?
கண்ணை இமைகள் காப்பது போல
காத்து நின்றாயே தமிழ் மண்ணை!
தாயின் மடியில் தவழ்ந்த நீயும்
தமிழ் மடியில் துயில்கின்றாயே!
தாயின் மடியில் தவழ்ந்த நீயும்
தமிழ் மடியில் துயில்கின்றாயே!
தாயின் மடியில் தவழ்ந்த நீயும்
தமிழ் மடியில் துயில்கின்றாயே!

இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்றோம்

- பிரேமதாசா

[கொழும்பு]

சுதந்திர நாட்டு மக்களே, எனது தமிழில் விளித்து ஜனா திபதி ரணசிங்க பிரேமதாசா உரையாற்றினார். தேசிய சுதந்திரதினத்தை முன்னி ட்டு சுதந்திர சதுக்கத்தில் நடை பெற்ற பிரதான வைபவத் தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பிரேமதாசா மேலும் கூறுகையில்; நாம் இரத்தம் சிந்தாமல் சுதந்தி ரத்தைப் பெற்றோம். ஆனால் அதைப் பாதுகாப்பற்ற இன்று நாம் இரத்தம் சிந்து வது விசனத்தை தருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

நினைவு கூருகின்றோம்..

1993-2-7

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - பரப் புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் நேரியல் [குசைப்பிள்ளை தனஞ்ஞனதாஸ் (உதயன்) - பறப்பாங்கண்டல், இடம்பன் - மன்னார்]

லெப். கரன்மாமா [முத்துக்குமாரு ஜெயகாந்த ராசா - மயிணை வடக்கு, சுன்னாகம் - யாழ்]

மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

இளங்கோ அன்ரன் [யோசப் நிக்கலஸ் மோகன் ராஜ்-பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில் - மன்னார்]

ஜீவன் [அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் (குமார்) - நெல்லுகண்டல், அடம்பன் - மன்னார்]

இலிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருட னான சமரில் வீரச்சாவெய்திய -

சுசில் [தானு தனிதரன் - 123, திருநகர், விநாயக புரம் - இலிநொச்சி]

இலிநொச்சி - உருத்திரபுரம், கூராவடி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சா வெய்தி -

நிமால் [ராசலிங்கம் யோகநாதன் - ஆனைஞ்சங்குளம், யோகபுரம் - இலிநொச்சி]

ரவி [தனிநாயகம் புவனேஸ்வரன் - உருத்திரபுரம் - இலிநொச்சி]

இதே சமரில்போது நிகழ்ந்த விமானக் குண்டுவீச் சில் வீரச்சாவெய்திய -

இளங்கோ [ஆறுமுகம் சிறீவேந்தன் - இல. 114, ஆல வைத்தீவு வீதி, பரந்தன் - இலிநொச்சி]

இலிநொச்சி - கனகபுரம் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீசசில்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

அன்சார் [கணபதிப்பிள்ளை கருணாகரன் - 48/3, 2-ம் ஒழுங்கை, முருகமோட்டை, பரந்தன் - இலிநொச்சி]

1989 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், முட்டுச்சேனை பகுதியில் இந்திய படையினர் பதுங்கியிருந்து மேற் கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். லிங்கம் [முத்தையவேல் கோடீஸ்வரன் - திருமலை]

இலிநொச்சி - கோணாவில் பகுதியில் இந்திய படை யினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு

2-ம் வருட நினைவுத்துளிகள்

கள்.) (சி-5918)

வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் கான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5924)

பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில்/இந்துக்கல்லூரிக்குஎதிரில் கே.கே. எஸ் வீதி கொக்குவில். பா.நே திசைரி 4 பி.ப.- 6 பி.ப. ஞாயிறு: 10மு.ப - 12 ந.ப. (சி-4058)

மாணவர்களுக்கு சலுகை

எமது தையல் நிலையத்தின் 10-வது ஆண்டை முன்னிட்டு மாணவர்களுக்கான சீருடை தையல் கூலியில் 20% கழிவு (சோட்ஸ் & சேட்ஸ்) முந்துங்கள் ''ஜெகபதி தையலகம்'' அந்தோனியார் கோவிலடி மானிப்பாய். (4059)

லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறுகின்றது

இப்பரீட்சைக்கு 1-ம் ஆண்டு தொடக்கம் 13-ம் ஆண்டு வரையுள்ள மாணவர்களுக்கு நடைபெறுகின்றது.

பண்பாட்டுக்கழக கூட்டம்

[வேலணை]

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையின் கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இல 33 பருத்தித்துறை வீதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. (14)

இலவச பாடநூல் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

வேலணை கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களின் இலவச பாடநூல்கள் கடந்த வெள்ளிக் கிழமை கோயில்வீதியில் உள்ள வேலணை கல்விக் கோட்ட அலுவலகத்தில் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை கெற்பலி பண்டிதர் குடியிருப்பில்உள்ளதீவக மாணவர்களுக்கான பாடநூல்களும் கடந்த வெள்ளிக் கிழமை கூட்டுறவுச் சங்க வாகனம் ஒன்றின் மூலம்அனுப்பி வைக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [22]

2-ம் வருட நினைவுத்துளிகள்

வீரஜனனம்:	வீரச்சாவு:
09	30
—	—
05	01
—	—
1974	1991

வீரவேங்கை கலிபன்

(சுந்தசாமி யோகதாசன்)

திதி: பிரதமை 7-2-1998

உதடுகளில் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
கனிவான உன் பேச்சும்
ஆண்டு இரண்டு சென்றாலும் உன் நினைவு
எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை.

ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். (4235) -குடும்பத்தினர்

தில் வைக்கப்பட்டிருந்தோம். அப்போது அங்கு வந்த சிறிலங்கா இராணுவ அதிகாரிகளில் ஒருவர் ''உங்களை சந்திக்க ஈபிடி.பி தலைவர் டக்ளஸ்தேவானந்தா வந்துள்

அதிகாரி புன்முறுவலுடன் ''நான் உங்களை வற்புறுத்தவில்லை. இது உங்கள் விருப்பம்'' எனக்கூறிவிட்டுச் சென்றார் எனக்கூறினார்.

மறவர் போரில் கலந்த மகனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
1967 - 09 - 26

தமிழ் மடியில்
1990 - 02 - 07

2-ம் லெப். றேகன்

(திருநாவுக்கரசு சிவபாலன்)

அன்னை வயிற்றினில் குடியிருந்து
அடுத்து வந்து அவனியில் பிறந்தாயே!
கண்ணை விழித்து உலகை ரசித்து
மெல்லச் சிரித்து மழலை மொழிந்தாயே!
தத்தி நடந்து பள்ளி சென்று
பாடம் பயின்று நின்றாயே!
என்ன மகனே! எம் செல்வ மகனே!
எம்மை பிரிந்து எங்கு சென்று நிற்கின்றாய்!
உன்னை விரும்பி தமிழன்னை-புதிய
உலகம் செய்ய அழைத்தாளோ!
மண்ணை மீட்க புறப்பட்டு - நீ
மறவர் போரில் கலந்தாயே!

மறவர் போரில் கலந்து, மண்ணில் கலந்துவிட்ட மகனின் ஆத்மா சாந்தி பெற காரைநகர் கருங்காலி போசுட்டி முருகனின் கழல் தொழுது நிற்கும்

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

கருங்காலி, காரைநகர்

தற்காலிக முகவரி:
இல. 368, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4238

சுன்னாகம் - யாழ்]

மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்கொண்ட தாக்குதலில் வீர சாவெய்தய -

இளங்கோ - அன்ரன் [யோசப் நிக்கலஸ் மோகன் ராஜ்-பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில் - மன்னார்]

ஜீவன் [அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் (சூமார்) - நெடுங்கண்டல், அடம்பன் - மன்னார்]

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சுசில் [தானு துனசிதரன் - 123, திருநகர், விநாயகபுரம் - கிளிநொச்சி]

கிளிநொச்சி - உருத்திரபுரம், கூழாவடி பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்தி -

நிமால் [ராசலிங்கம் யோகநாதன் - ஆனிஞ்சங்குளம், யோகபுரம் - கிளிநொச்சி]

ரவி [தனிநாயகம் புவனேஸ்வரன் - உருத்திரபுரம் - கிளிநொச்சி]

இதே சமரின்போது நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

இளங்கோ [ஆறுமுகம் சிறீவேந்தன் - இல. 114, ஆலைத்தீவு வீதி, பரந்தன் - கிளிநொச்சி]

கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

அன்சார் [கணபதிப்பிள்ளை கருணாகரன் - 48/3, 2-ம் பகுவம், முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி]

1989 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், முட்டுச்சேனை பகுதியில் இந்திய படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். லிங்கம் [குழந்தைவேல் கோடீஸ்வரன் - திருமலை]

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் இந்திய படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்தி -

லெப். விசுவாசம் [விசுவலிங்கம் புத்திரசீலன் - ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு - மணலாறு]

மட்டக்களப்பு - கொடுவாமடுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட 5 தமிழர்கள்.

1990 ம் ஆண்டு யாழ். பழைய பூங்காப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

2-ம் லெப். றேகன் [திருநாவுக்கரசு சிவபாலன் - கருங்காலி, காரைநகர்- யாழ்.]

1992 ஆம் ஆண்டு மட்டு - மயிலவெட்டுவான், கரடியனாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்டப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

ரவீந்திரன்-ரவீந்தர் [சபாரத்தினம் உருத்திரன்- வி. வி. வீதி, பெரியநீலாவணை - மட்டு.]

அருள்நாதன் [தம்பிப்பிள்ளை பேரின்பராஜா - வெல்லாவெளி - மட்டு]

மயூரநாத்-ஜஸ்ரின் [— ரமேஷ் - புன்னைச் சோலை, மாமாங்கம்-மட்டு.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5950)

ஒளி தந்த 22 தீபங்கள்

திருக்கோணமலை மக்களுக்கு அது ஒரு கறுப்பு நாள். திருக்கோணமலையின் போராட்ட வரலாற்றில் அதுவொரு நெருப்பு நாள். மாபெரும் வரலாறொன்றை சரித்த வெற்றியுடன் திரும்பிவரும் வேளையில் அந்த வீரபுதல்வர்கள் இருபத்திரண்டு பேரைக் கடலை சுருட்டிக் கொண்டது ஈழங்கையின் சிங்களச் சிப்பாய்களைக் கண்ணிவெடியிலே சிதறடித்தவர்கள். இந்தப் பயங்கர கூலிப் படையை சொல்லிச் சொல்லிச் சுட்டவர்கள்.

ஓ! எத்தனை கோரமான நிகழ்வு அது. ஜமாலியா என்ற அந்த முஸ்லிம் கிராமத்திலே முகமிட்டிருந்த தமிழினத் துரோகிகளின் ஈ. என். டி. எல். எவ்) முகாமைக் கடலோர்க்மாகச் சென்றடைந்த எமது புலிகள் அந்தத் துரோகக் கும்பலைச் சுற்றிவளைத்துத் தாக்க... எதிர்பாராத தாக்குதலாலும், எங்கள் வீரர்களின் அதி வேகமும் கூடு துரோகக் கூட்டம் ஓரிரு நிமிடங்களிலே தங்கள் முகாமை விட்டுத் தலை தெறிக்க ஓடிவிட,

வெற்றி புலிகளுக்கே என்றானது. நூற்றுக் கணக்கான ஆயுதங்கள், எண்ணிலடங்கா பதுட்டாக்கள், ரவைகள் பெரிய வாளிகளிலும் கான்களிலும் தோட்டாக்கள் படகுகளில் ஏறிது. அந்த ஏராளமான சுமைகளோடு இரண்டு படகுகள் தயாராயின.

வீரர்கள் வந்த மூன்று படகுகளில் ஒரு படகோட்டி பயப்பீதியில் காணாமல் போயிருந்தான். அது விதியின் செயலாக இருந்தது. ஏனெனில் ஏராளமான சனத்தின் காரணமாக இரண்டு படகுகளும் நீர் மட்டத்தில் நின்றிருந்தன,

அந்த முகாம் வெற்றியடைந்ததுமே மேஜர் கமல் மூலமாக வெற்றிச் செய்தி எங்களின் மத்திய முகாமை வந்தடைகிறது. உடன் சென்ற மேஜர் மதியும் மேஜர் சுரேசும்; 'இன்னும் நூறு புதிய புலிவீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் கொண்டு வருகின்றோம்' என்ற வெற்றியின் பெருமிதமயக் குதூகலத்துடன் கூறுகின்றார்கள்.

ஆம்! கமலும், மதியும், சுரேசும் ஏற்கனவே பல ஆயுதங்களை சிங்கள இராணுவங்களிடமிருந்து கைப்பற்றி நூற்றுக்கணக்கான புதிய வீரர்கள் உருவானார்கள். ஒரு ஆயுதம் கைப்பற்றப்படும் போது ஒரு புதிய வீரன் கிடைத்ததாக நினைக்கின்ற புரட்சித் தளபதிகள் அவர்கள். நூற்றுக்கணக்கான ஆயுதங்களை வென்றதும் அவர்கள் நூறு வீரர்களைக் கண்டதாகவே ஆனந்தமானார்கள்.

ஆழ நடுக்கடலிலே பயணித்துப் பெரிய தொரு வெற்றியைப் பெற்றிருந்தார்கள். அந்த மாபெரும் வெற்றியில் மகிழ்ந்த அவர்களின்மீது பொறாமை கொண்ட இயற்கை பெரும் சீற்றத்துடன் அவர்கள்மீது, புயலென சீறியது. அது விதியின் சதி. விடுதலைக்கு உரமிடவர்களை, மண்ணின் காவலர்களை கிழி எனும் கொடும் அரக்கன் வெற்றியை அனுபவிக்க விடாமல் பேரலைகளால் சிதைவநாசம் செய்துவிட்டான்

காலையில் விழிதெழுந்ததுமே கடுந்த நடவடிக்கைக்கு அடித்தளம் போடுகின்றவர்கள், நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளும், மிதிவெடிகளும் செய்கின்றவர்கள்.

கெரில்லாப்போர் முறை லிருந்து மெல்ல மெல்ல முன்னேறி; சாட்டிலே வீடுகள் கட்டி, பெரிய தோட்டங்கள் செய்து வாகனங்கள் ஓடிவர வழிகள் வெட்டி ஒரு புதிய தேசத்தை கானகத்தில உருவாக்கி நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு பயிற்சியளித்து. காடடினுள் காலைலும் ஒவ்வொரு கிடையின் சப்பாத்துக் காலும் சிதறுகின்ற மாயத்தைக் காடு எல்லையிலே குறிப்சனது செய்துவிட்டு, தேடிச்சென்று நேரடியாக மோதுகின்ற புதுயுத்தை அவர்கள் தினசரியாக்கினார்கள்.

1989ஆம் ஆண்டு தமிழீழமெங்கும் முதல் முதலாக 'மாவீரர் நாள்' பிரகடனமாயிற்று. மேதகு வீரதி தலைவர் பிரபாகரனின் ஆசியுடன் எமது வீரர்கள் சாம்பத்திவு என்ற கிராமத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றார்கள் சாம்பத்திவு எதிரிகளின் (ஐ பீ கே. வ் —ஈ என். டி. எல். எவ்) மத்திய முகாம்கள் அமைந்திருந்த கிராமம் திருமலை நகரத்தின் அண்மையிலுள்ள பெரிய கிராமம். அன்று முழுவதும் இந்திய டாங்கிகளும் துரோகக் கூட்டமும் எமது வீரர்களுடன் மோதினார்கள். ஆயினும் கொண்டிருந்த இலட்சியம் அன்றைய தினமவரை குன்றிடவில்லை. சாம்பத்திவு தோரணங்களாலும், வண்ண வண்ண வளாலும் ஜொலிக்க, ஒலிபெருக்கி வீரர் புகழ் பாடியது. எங்களின் வீரர்கள் சளையாது சண்டையிட்டு அன்று முழு நாளும் சாம்பத்திவைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

இப்படியான வரலாற்றின் மறக்க முடியாத சாதனைகளெல்லாம் படைத்த அந்த மறவர்கள் ஒரு பெரிய சாதனையை வென்றெடுத்து வரும் வழியிலே - பிரிந்தார்கள். எம்மை விட்டுப்பிரிந்தார்கள். அவர்கள் வெற்றியுடன் வருகிறார்கள் என்று அறிந்ததுமே சாம்பத்திவுக் கிராமம் மகிழ்ந்ததும்; பின் அவர்கள் ஆழ்கடலில் உறைந்து கின்றது தெரிந்ததும் இருண்டதும் ...இன்னமும் மறக்க முடியாத நினைவு.

சாதனை படைத்தவர்களை தன் கொடிய பேரலைகளால் கொன்று சாதனை படைக்க; கொடிய விதியரக்கன் கடலலையை ஏவி விட்டு விட்டான் போலும், மக்களின் நெஞ்சங்களிலே மறவீரர்களாக பவனி வந்தவர்கள் இன்று கதறி அழும் மக்களிடை ''மாவையிட்ட மாவீர'' ராய் மாறிவிட்டார். அவர்கள் கட்டியாண்ட தேசம் அவர்களைத் தேடி நிற்கின்றது. 'கமல் மாமா' என்ற குழந்தைகளும் 'சுரேஷ் அண்ணா' 'மதி அண்ணா' என்ற மழலைகளும் விக்கி விக்கி அழுகின்றார்கள். ''இனி அந்த மாமா வரமாட்டாரா? என்று கேட்டவர்கள் விழிகளெல்லாம் கண்ணீர.

இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறுகின்ற அந்தக் காலகட்டத்திலே இந்திய அரசின் கைக்கூலிகளாக செயற்பட்ட ஈ என் டி.எல் எவ் போன்ற துரோகிகள் தாங்களும் இந்தியக் கப்பல்களில் ஏறி; தப்பியோட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்

இந்தத் துரோகிகள் தப்பிச் செல்லவிருக்கின்ற அந்த ஓரிரு நாட்களில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகள் மூன்று படகுகளில் ஆழக்கடலில் பயணித்து ஜமாலியாக் கடற்கரையிலே தரையிறங்கினார்கள். கரையிலிருந்து சுமார் ஐந்து நிமிட நடை தூரத்திலிருந்த ஈ என் டி. எல். எவ் துரோகிகளின் முகாமை புலிகள் சுற்றிக் கொள்ள சுமாராக ஐந்துநிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சியடைந்தவுட அந்த முகாமிலுள்ளிருந்த மிக ஏராளமான ஆயுதங்களையும், எண்ணிலடங்கா ரவைகள், பைகள், ரவைக் கூடுகளையும் சுமந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

கரையில் இரண்டு படகுகள் மட்டுமே நிற்கின்றன ஆம் ஒரு படகோட்டி பயப்பீதியில்படகோடு போய்விட்டான் இது விதியின் முதற்படி. எமது வீரர்கள் இரண்டு படகுகளிலும் ஆயுதங்களை ஏற்றி முடிகின்றார்கள் படகுகள் பாரத்துடன் கடலில் மிதக்கின்றன. அடுத்தடுத்து ஒவ்வொருவராக படகிலேறுகிறார்கள்...படகு புறப்படுகின்றது.

கரையிலிருந்து ஐந்து நிமிட தூரம் படகு ரண்டும் அசைந்தாடிச் செலலுகின்ற நேரத்தில் திடீரென பெருமலைகளோடு பேரலைகள் ஆர்ப்பரிக்க ஆரம்பிக்கின்றன. அதுவொரு எதிர்பாராத நிகழ்வு படகுகளினுள் நீர் நிரம் பிவிடுகிறது. எட்டாத தூரத்தில கரை தெரிகிறது. போக வேண்டியது ஏராளமான தூரம். படகுகள் நீரினுள் அமிழ்கின்றன

கைகளில் ஆயுதங்களும், காலிலே பூட்களும் நெஞ்சிலே சோகமும் நீந்த முடியாத நிலையாகிறது. உப்பு நீர் உயிற்றை நிரப்புகிறது வாந்தியும வருகிறது இது சமயம் கரையில்ல இந்திய இராணுவம வேட்டுத் தீர்க்கிறது தப்பிச்சென்ற ஈ என. டி. எல் எவ்.துரோகிளித்தவலிஜமாலியாவின் அண்மையிலிருந்த லவ்லின் நெஸ்டோர்ஸ் முகாமிலிருந்து வந்த இந்தியத் துருப்பு கரையில் நின்று கணைணிபுச் செய்தபடி... துப்பாக்கி முழக்கம் செய்கிறது.

தோட்டா எட்டாத தொலைவிலே எங்கள் வீரரின் இரு படகுகளும் நீரில் மூழ்கிவிட... ஆழக்கடலின் அடிமணலில்ல னபாரங்களுடன் மூச்சுக்குப்போராடி மாண்டனர்சிலர்; இனி முடியாது என்றறிந்து சயனைற்றைக் குப்பியை வயில் என்று மடிந்தவர் பலர்...ஆயுதங்களை பிள்ளை யென்றும், தாயென்றும் மார்போடணைத்துக் கொண்டு சுவாசிக்க மறந்தவரும் பலர்.

நெஞ்சங்களிலே சாதனையால் படைத்த வெற்றிகளின் அந்த வீரக்காவலர்கள் துன்பப் பெருமூச்சை அலைத் தந்துவிட்டு சென்று விட்டார்கள்.

ஆனால் அவர்கள் ஒரு விடயத்தை இறுதி நேரத்திலும் வென்று வந்துதான் வீரச்சதியில் சாய்ந்தார்கள். அவர்கள் சாகின்ற கடைசி நேரத்திலும் ஒரு பெரிய வெற்றியை ஈட்டிய மகிழ்வுடன் தான் கடலில் உயிர் விட்டார்கள்.

அந்த நிகழ்விலே உயிர்துறந்த ஒரு வீரனின் தாய் என்னுடைய மகன் கடலில் செத்ததிற்கு நான் வருந்தவில்லை. அவன் வீரனாக செத்திருக்கிறான் அதனால் நான் பெருமையடைகிறேன்' என்று அந்த வீரனைப் பெற்றவள் கூறினாள். அந்தத் தாய்க்கு இனிமேல் புலிவீரர்கள் ஒவ்வொருவரும் தன் பிள்ளையாகவே தெரியும்.

வெற்றியுடன் புலிவீரர்களை வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த சாம்பத்தீவு மக்கள் சேதியறிந்ததும் துன்பத்தில் துடித்துப் போனார்கள். திருக்கோணமலையெங்கும் தமிழீழமெங்கும் செய்தி கேட்டு மக்கள் இமைக்க மறந்தனர். மூடிய விழிகளிலிருந்து நீர்த்துளிகள். ஒரு ஏழ்ச இழக்கவில்லை. தன் குஞ்சு எல்லாவற்றையுமே இழந்தது போல திருமலை மக்கள் ஆறாத்துயரில் ஆழ்ந்து போனார்கள்.

இதில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகளுடன் கப்டன் நேமி, கப்டன் ரகு; கப்டன் குணா; கப்டன் மகேஷ்; கப்டன் அன்ரன் ஆகிய இன்னும் தளபதிகளும்...

★ லெப். இளம்பரிதி ★ 2-ம்லெப் கிருபன் ★ 2-ம் லெப். அசோக் ★ 2-ம்-லெப். நவா ★ 2-ம் லெப். சங்கர் ★ வீரவேங்கை சோனி ★ வீரவேங்கை குமார் ★ வீரவேங்கை விஜி ★ வீரவேங்கை கருணா ★ வீரவேங்கை சின்னமதி ★ வீரவேங்கை சின்னசுரேஷ் ★ வீரவேங்கை காந்தி ★ வீரவேங்கை பைரவன்.

★ 2-ம் லெப் சாந்தன் போன்ற வீரர்களும் கடலிலே கரைந்தவர்கள். இவர்கள் மண்ணை நேசித்தவர்கள் மண்ணுக்காக குருதியை நீராய் இறைத்தவர்கள். கடைசி நேரமும் சாகசம் படைத்த சாதனையாளர்கள். அவர்கள் மீட்கத் துடித்த தேசம் ... அவர்களின்றி விக்கித்து நிற்கின்றது. மண் ஒரு நாள் மீட்கப்படும். அன்று தான் இந்த வீரர்களின் கனவு நனவாகும். அவர்கள் இப்பொழுதும் அந்த மண்ணில் காவல்களாகவே உலா வருகின்றார்கள்.

- திருமலை மக்கள்

குனிந்த கிழவனும் நிமிருகின்ற காலம்

இந்த மண்
நாங்கள் விளைந்த கருவறை!
இங்கே
எதிரிகள் நுழைந்தால்
அதுவே அவனுக்குக் கல்லறை!
எங்கள் தாயக மேனியில்
சிங்கள நாய்கள்
நகம்பதிக்க
நாங்கள் அனுமதியோம்!
எங்கள்
பாலகர் கைகளில் துலங்கும்
படைக்கருவியும்
எதிரியைக்
காலனுக்கு அனுப்பவே
காத்திருக்கிறது!
எங்கள்
மங்கையர்தம் பங்களிப்பும்
பகைவரைச்
சங்கரிப்பதுதான்!
இந்த மண்ணில்
நாணல்கள் கூட
வளைந்து கொடுக்க
நாணுகின்றன!
குனிந்த கிழவனும்
துணிந்து நிமிருகின்ற
வீரம்
கனிந்த காலமிது!
ஆகலால்
எதிரியின் கணிப்புக்கள்
தவறாகிப் போகும்
என்பதுதான்
சரியான கணிப்பு.

▪ நிலா தமிழின்தாசன்
திருமலைத் தொடர்பகம்

ஒளி தந்த 22 தீபங்கள்

மேஜர் கமல்

மேஜர் மதி

மேஜர் சுரேஸ்

கப்டன் நேமி

கப்டன் ரகு

கப்டன் குகன்



கப்டன் மகேஷ்

கப்டன் அன்ரன்

இலப்டினன்ட்
கில்பட்

லெப்டினன்ட்
கிருபன்

2-ம் லெப்-
சங்கர்

2-ம் லெப்.
அசோக்

2 ம் லெப்.
சாந்தன்

2ம் லெப்
நவா

வீரவேங்கை
சின்னமதி



வீரவேங்கை
குமார்

வீரவேங்கை
காந்தி

வீரவேங்கை
சின்னசுரேஸ்

வீரவேங்கை
பைரவன்

வீரவேங்கை
கருணா

வீரவேங்கை
விஜி

வீரவேங்கை
சோனி

(சி 5952)

- திருமலை மக்கள்

சிந்தனைக்கு

அயலாரிடமிருந்து கற்ற முழு உண்மை ஒன்றை விட, நாமே நாடிப் பெறும் அரை உண்மை அதிகம் மதிப்பு உடையது.

— டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 07-02-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 035-2389 சிர்வாகபீடம் 9028
த. பெ. எண் - 05

'பிச்சை' சுதந்திரம்

"நாம் இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்றோம், ஆனால், அதனைக் காப்பாற்ற இன்று நாம் இரத்தம் சிந்துவது விசனத்தைத் தருகின்றது" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா சிறிலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பிரதான வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் இந்தியாவில் சரிந்த போது இலங்கையை வைத்துக்கொள்வதினால் பெரும் நன்மை கிடைத்துவிடப் போவதில்லை, பொருளாதார நட்டமே மிஞ்சும் என்ற நிலையில் பிரிட்டிஷ் இலங்கையை விட்டு வெளியேறியது. இதன் காரணமாக இலங்கைக்குச் 'சுதந்திரம்' கிடைத்தது.

அதாவது சிறிலங்காவின் சுதந்திரம் போராடிப் பெறப்பட்டதோ அன்றி இரத்தம் சிந்திப் பெறப்பட்டதோ அல்ல. உலக அரசியற் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப பிச்சையாகக் கிடைத்ததொன்று. இந்நிலையைத்தான் சிறிலங்கா ஜனாதிபதி 'பெருமையாக' இரத்தம் சிந்தாமல் பெறப்பட்டசுதந்திரம் என தெரிவித்துள்ளார். ஆனால், போராடாமல், இரத்தம் சிந்தாமல் பெறப்பட்டதினால்தான் சுதந்திரத்தின் அருமை சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை என்பதோடு சுதந்திரத்திற்காக மக்கள் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பார்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் இந்தியாவில் புரிந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையைப்போன்றோ, அமெரிக்க துருப்புகள் வியட்னாமில் புரிந்த மைலாய் படுகொலையைப் போன்றோ, பங்களாதேஷில் பாகிஸ்தான் ராணுவம் புரிந்த படுகொலைகள் போன்றோ, பொஸ்னியாவில் சேர்பிய இராணுவம் புரிந்துகொண்டிருக்கும் படுகொலைகளைப் போன்றோ ஒரு படுகொலையாவது சிங்களவருக்கு நேர்ந்திருந்தால், சுதந்திரத்தின் அருமையும் அதற்காகப் போராட வேண்டிய அவசியமும் சிங்கள ஆட்சியாளர்களுக்குப் புரிந்திருக்கும்.

அத்தோடு, ஓர் இனத்தின் சுதந்திரம் மற்ற நாட்டின் சுதந்திரத்தைப் பாதிக்காது என்பதும் தெரிந்திருக்கும். அதாவது இலங்கையின் சுதந்திரம் பிரிட்டனின் சுதந்திரத்தைப் பாதித்திருக்குமானால், செக்கோசெலவாக்கியாவின் பிரிவினை செக் மக்களின் சுதந்திரத்தைப் பாதித்திருக்குமானால், முன்னாள் சோவியத் குடியரசுகளின் பிரிவினை ரஷ்யாவின் சுதந்திரத்தைப் பாதித்திருக்குமானால், அந்நாடுகள் ஒருபோதும்

புலிகளிடம் உள்ள பொலிசாரை விடுவிக்க உடன் நடவடிக்கை தேவை

- பெற்றோர் பொலிஸ்மா அதிபரிடம் வற்புறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட முப்பத்தொன்பது பொலிசாரின் விடுதலை தொடர்பாக உடனடியாக நடவடிக்கையில் ஈடுபடுமாறு சிறிலங்கா பொலிஸ்மா அதிபரிடம் இவர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் புலிகளால் விடுவிக்கப்பட்ட இரு பொலிசாரும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசாரின் வீடுகளுக்கு சென்று திரும்பியதன் பின்னரே இத்தகைய நெருக்கடி உருவாகி இருப்பதாகபொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கொழும்புப் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

அத்துடன் இவர்களின் விடுதலையை மனிதநேய அடிப்படையில் பார்க்குமாறும் அவர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவர்களை விடுவிக்க உதவுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் அவர்களது பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்க விளம்பரங்கள்

ரைம்ஸ், லங்காதீப பத்திரிகைகளுக்கு நிறுத்தம்

சண்டே ரைம்ஸ், லங்காதீப பத்திரிகைகளுக்கு வழங்கிவந்த விளம்பரங்களை அரசு நிறுத்தி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. காப்புறுதிக் கூட்டுத் தாபனம், வங்கிகள் ஆகியனவும் ரைம்ஸ் குறாப் பத்திரிகைகளுக்கு வழங்கி வந்த விளம்பரங்களை நிறுத்தவுள்ளன.

மேலும் அரசுசார்பான தனியார் துறையினரும் இப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதை விரைவில் நிறுத்திக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊழல் மற்றும் அரச நிறுவனங்களில் நிலவும் லஞ்சம் ஆகியனவற்றைக் கண்டிக்கும் பத்திரிகைகளுக்கு எதிராக அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அரசு விரைவில் தேர்தலை நடத்தவுள்ளதால் முழுத் தொடர்புச் சாதனங்களையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான முன்னோடி நடவடிக்கை இது என்று எதிர்க்கட்சி தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிராக எழுதி வரும் ஐலண்ட் பத்திகையிலும் அரசுகைவைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் மூன்று பத்திரிகை நிறுவனங்கள் செய்தித்தாள்களை வெளியிட்டு வருகின்றன. இந்த மூன்று நிறுவனங்களில் அரச நிறுவனமான ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தைத் தவிர ரைம்ஸ் பத்திரிகை நிறுவனம் மற்றும் ஐலண்ட் பத்திரிகையை வெளியிடும் உப்பாலி நிறுவனங்களையும் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் சில தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலக சேவைக்காக

10,000 பொலிசார் திருமலையில் குவிப்பு

[கொழும்பு]

திருக்கோணமலை நகரில் ஜனாதிபதி செயலக நடமாடும் சேவை நடத்தப்பட்ட போது பாதுகாப்பிற்காக பத்தாயிரம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருக்கோணமலை மாவட்டத்தில் நாளாந்த பொலிஸ் சேவைக்கு சுமார் நான்காயிரத்து ஐந்நூறு பேர் ஈடுபடுத்தப்பட்டனர்எனவும், ஏனையவர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இக் காலப் பகுதியில் இம் மாவட்டத்தில் இராணுவத்தினர் தொகையும் இரண்டுமடங்காக அதிகரிக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இறந்த பெயரில் ஓய்வூதியம் மோசடி அம்பலம்

[யாழ்ப்பாணம்]

இறந்தவரின் ஓய்வூதிய வவுச்சரை (உறுதிச்சீட்டு) கொடுத்து வங்கியில் பணமாக்கிய மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்துக் கள்ளக் கையெழுத்த வைத்தே வவுச்சர்கள் மாற்றப்பட்டுள்ளன இதற்குஉடந்தையாக இருந்த கிராமசேவையாளர் மீது ஒழுங்காற்று நடவ

கிரேக்க கப்பல் மூழ்கியது

(கொழும்பு)

கிரேக்க நாட்டுக் கப்பல் ஒன்று இலங்கைக் கடல் எல்லைக்குள் கவிழ்ந்ததில் இரு மாலுமிகள் உயிரிழந்ததுடன் ஐந்து மாலுமிகளைக் காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவியாழக்கிழமைகொழும்பிற்கு தெற்கே நூறு மைல் தொலைவில் "மேஸ்கிட்டிக்" என்ற சரக்குக் கப்பலே கவிழ்ந்ததாகவும் இதில் பணியாற்றிய ஏனைய இருபத்திரெண்டு மாலுமிகள் நோர்வேக் கப்பல் ஒன்றின் மூலம் காப்பாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனத்திற்கு உரிமைகள் வழங்கவேண்டும்

-அநுரா

(கொழும்பு)

சிறுபான்மை இன மக்களுக்கு இன்று அதிகளவு பிரச்சினைகள் உண்டு. இவை தீர்க்கப்பட்டாலேயே ஒற்றை ஆட்சி அமைப்பை நிலைபெறச் செய்ய முடியும்என்று பாராளுமன்றக் கட்டிடத்தில் கடந்த வியாழன் நடைபெற்ற சுதந்திர தின வைபவத்தில் எதிர்க்கட்சிகளின் சார்பாக கலந்து கொண்டு பேசிய அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; குறுகிய அரசியல் லாபம் கருதாது சாதாரணமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் நாட்டின் சுதந்திரதினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டபோதும் சுதந்திரமாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை என்றும், 1977க்குப் பின் சுதந்திரமான தேர்தல் நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைக்கு வெளிநாடுகள் முட்டுக்கட்டை

— குணதாச லியனகே

(கொழும்பு)

யுத்தத்தை நிறுத்தி வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் அவற்றை பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டுவிட்டது என்று பிரபல அரசியல் விமர்சகர் குணதாச லியனகே தெரிவித்தார்.

லங்காதீப பத்திரிகைக்கு பேட்டி வழங்கிய அவர் மேலும்குறிப்பிடுகையில் பேச்சுவார்த்தைக்கு வெளிநாடுகள் முட்டுக்கட்டை போடுகின்றன. எப்படியிருந்தாலும் நாட்டின் நலன் கருதி யுத்தம் பற்றி மிக விரைவில் தீர்மானிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

போஷாக்கு நிலை விபரம் யுனிசெவ் நிறுவனம் கோரியது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டஅகதிமுகாம்களின் போஷாக்கு நிலைமைகள் பற்றிய விபரங்களை யுனிசெவ் நிறுவனம்கோரியுள்ளது.

மேற்படி நிறுவனம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு விடுத்துள்ள இவ்வேண்டுகோளில் யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களின் விபரங்கள், அங்குள்ள சிறுவர்களின் போஷாக்கு நிலைமைகள், முகாம்களை பராமரிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் விபரங்கள் ஆகியவற்றை தமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளது. இதேவேளை மேற்படி நிறுவனம் 1993 இல் உதவி வழங்கும் நாடுகளில் வடக்கையும் சேர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தினால் பெரும் நன்மை கிடைத்துவிடப் போவ தில்லை, பொருளாதார நட்டமே மிஞ்சும் என்ற நிலையில் பிரிட்டிஷ் இலங்கையை விட்டு வெளி யேறியது. இதன் காரணமாக இலங்கைக்குச் 'சுதந் திரம்' கிடைத்தது.

அதாவது சிறிலங்காவின் சுதந்திரம் போரா டிப் பெறப்பட்டதோ அன்றி இரத்தம் சிந்திப் பெறப்பட்டதோ அல்ல. உலக அரசியற் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப பிச்சையாகக் கிடைத்ததொன்று. இந்நிலையைத்தான் சிறிலங்கா ஜனாதிபதி 'பெரு மையாக' இரத்தம் சிந்தாமல் பெறப்பட்டசுதந்திரம் என தெரிவித்துள்ளார். ஆனால், போராடாமல், இரத்தம் சிந்தாமல் பெறப்பட்டதினால்தான் சுதந் திரத்தின் அருமை சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை என்பதோடு சுதந்திரத்திற்காக மக் கள் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப் பார்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் இந்தியாவில் புரிந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையைப்போன்றோ, அமெரிக்க துருப்புகள் வியட்னாமில் புரிந்த மைலாய் படுகொலையைப் போன்றோ, பங்களா தேஷில் பாகிஸ்தான் ராணுவம் புரிந்த படுகொலை கள் போன்றோ, பொஸ்னியாவில் சேர்பிய இரா ணுவம் புரிந்துகொண்டிருக்கும் படுகொலைகளைப் போன்றோ ஒரு படுகொலையாவது சிங்கள வருக்கு நேர்ந்திருந்தால், சுதந்திரத்தின் அருமையும் அதற் காகப் போராட வேண்டிய அவசியமும் சிங்கள ஆட்சியாளர்களுக்குப் புரிந்திருக்கும்.

அத்தோடு, ஓர் இனத்தின் சுதந்திரம் மற்ற நாட்டின் சுதந்திரத்தைப் பாதிக்காது என் பதும் தெரிந்திருக்கும். அதாவது இலங்கையின் சுதந்திரம் பிரிட்டனின் சுதந்திரத்தைப் பாதித் திருக்குமானால், செக்கோசெலவாக்கியாவின் பிரி வினை செக் மக்களின் சுதந்திரத்தைப் பாதித்தி ருக்குமானால், முன்னாள் சோவியத் குடியரசு களின் பிரிவினை ரஷ்யாவின் சுதந்திரத்தைப் பாதித்திருக்குமானால், அந்நாடுகள் ஒருபோதும் இவற்றின் சுதந்திரத்திற்கு அனுமதித்திருக்காது.

ஆனால், சிலவேளை, இந்நாடுகளின் ஏகா திபத்திய நோக்கத்தையும், அதிகாரத்தின் எல்லை யையும், இனங்களின் விடுதலை பாதித்திருக்கக் கூடும். அத்தோடு, இந் நாடுகளின் பொருளாதா ரத்தையும் அவை பாதித்திருக்கக் கூடும். ஆனால், இவையாவும் அந்நாடுகளுக்கு உரியவையல்ல. அவை அதிகாரத்தின் மூலமும் அடக்குமுறை மூல முமே அந்நாடுகளில் இருந்து சுரண்டிப் பெற்றுக் கொண்டவை. அதாவது இச்சிறுபான்மை இனங் களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டவை என்பதே உண்மை.

இந் நிலையில், சிறிலங்கா ஜனாதிபதி சுதந் திரத்தைக் காப்பாற்ற இரத்தம் சிந்த வேண்டியுள் ளதுஎன்பது தமது அதிகாரத்தை நிலை நாட்டவும், தமிழரை ஆளவும் இரத்தம் சிந்த வேண்டியுள் ளது என்பதே ஆகும். அதைவிடுத்து சிங்கள தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்க இரத்தம் சிந்தவேண்டியுள்ளது என்பதல்ல.

ஆனால், ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வளவு பலம் பொருந்தியவர்களாக இருப்பினும் தமது ஆக்கிர மிப்புக் கொள்கையைக் கைவிடும் வரை இரத்தம் சிந்தியே ஆகவேண்டும் என்பதும், ஆக்கிரமிப் பாளர்கள் எவ்வளவு ஒடுக்குமுறையை மேற்கொண் டாலும் எப்பொழுதும் இறுதி வெற்றி பெற்ற தில்லை என்பதும வரலாறு தந்த படிப்பினையாகும்.

ஆட்சி அமைப்பை நிலைபெறச் செய்ய முடியும்என்று பாராளு மன்றக் கட்டிடத்தில் கடந்த வியாழன் நடைபெற்ற சுதந் திர தின வைபவத்தில் எதிர்க் கட்சிகளின் சார்பாக கலந்து கொண்டு பேசிய அநுரா பண்டாரநாயக்கா தெரிவித் தார்.

என்றும் தெரிவித்தார். அத்து டன் நாட்டின் சுதந்திரதினம் வெகுவிமரிசையாகக் கொண் டாடப்பட்டபோதும் சுதந்திர மாகத் தேர்தல்கள் நடத்தப்பட வில்லை என்றும், 1977க்குப் பின் சுதந்திரமான தேர்தல் நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைக்கு வெளிநாடுகள் முட்டுக்கட்டை

— குணதாச லியனகே

(தொழும்பு)

யுத்தநிறுத்தி லடக்கு, வடக்கு பிரச்சினையைத் தீர்ப் பதற்கு பல சந்தர்ப்பங் கள் இருந்தபோதும் அவற்றை பயன்படுத்துவது தவிர்க்கப் பட்டுவிட்டது என்று பிரல அரசியல் விமர்சகர் குணதாச லியனகே தெரிவித்தார்.

லங்காதீப பத்திரிகைக்கு பேட்டி வழங்கிய அவர் மேலும்குறிப்பிடுகையில் பேச்சு வார்த்தைக்கு வெளிநாடுகள் முட்டுக்கட்டை போடுகின் றன. எப்படியிருந்தாலும் நாட்டின் நலன் கருதி யுத் தம் பற்றி மிக விரைவில் தீர் மானிக்கவேண்டும் என வும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலக சேவைக்காக

10,000 பொலிசார் திருமலையில் குவிப்பு

[தொழும்பு]

திருக்கோணமலை நகரில் ஜனாதிபதி செயலக நடமா டும் சேவை நடத்தப்பட்ட போது பாதுகாப்பிற்காக பத்தாயிரம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருக்கோணமலை மாவட் டத்தில் நாளாந்த பொலிஸ் சேவைக்கு சுமார் நான்காயி ரத்து ஐந்நூறு பேர் ஈடுபடுத் தப்பட்டனர்எனவும், ஏனைய வர்கள் வெளிமாவட்டங்களி லிருந்து கொண்டு வரப்பட்ட னர் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இக் காலப் பகுதியில் இம் மாவட்டத்தில் இரா ணுவத்தினர் தொகை யும் இரண்டுமடங்காக அதி கரிக்கப்பட்டதாக தொழும்பு பத்திரிகையொன்று செய் தி வெளியிட்டுள்ளது.

இறந்த பெயரில் ஓய்வூதியம் மோசடி அம்பலம்

[யாழ்ப்பாணம்]

இறந்தவரின் ஓய்வூதியவுச் சரை (உறுதிச்சீட்டு) தொடர் தும் வங்கியில் பணமாகிய மோசடி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதற்கும் ஒரு கிராமசேவை அதிகாரிக் கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப் பாணத்தில் உள்ள வங்கி ஒன்றிலேயே இந்த வவுச்சர் மாற் றப்பட்டுள்ளது.

சுமார் ஐந்து மாதங்களுக்கு மேலாக இவ்வாறு வவுச்சர் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஓய்வூதிய வவுச்சருக்குரியவர் இறந்து போக அவர் உயிரோடு இருப் பதாகக் கிராமசேவையாளர் வழங்கிய உறுதிமொழியை அடுத்தே வங்கி வவுச்சர்கள் மாற்றப் பட்டுள்ளன. இதற்குஉடந்தை யாக இருந்த கிராமசேவையா ளர் மீது ஒழுங்காதிறு நட வடிக்கை எடுக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

தடுக்க புதிய சட்டம்?

கடவுச்சீட்டு மோசடியைத் தடுக்க புதிய சட்டமொன்று விரைவில் நிறைவேற்றப்பட வுள்ளது. மோசடியான முறை யில் கடவுச்சீட்டு பெறுதல், வழங்குதல், உபயோகித்தல் என்பவற்றைத் தடைசெய்யக் கூடிய வகையில் புதிய சட்டம் வரையறுக்கப்படவுள்ளது.

மாடு, ஆடு வெட்டுவது முற்றாக தடுக்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை பகுதியில்மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய் வோர் கண்ட இடங்களிலும் வைத்து மாடுகள், ஆடுகள் வெட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகப் பருத் தித்துறை பிரதேசசபை அறி வித்துள்ளது. மாடுகள், ஆடு கள் வெட்டப்படுவதற்கென அமைக்கப்பட்டுள்ள கொல் களத்திலேயே மாடுகள், ஆடு கள் வெட்டப்பட வேண்டும் எனறும் இதனை மீறி சட்ட விரோதமாகமாடுகள், ஆடுகள் வெட்டுவோருக் கெதிராகத் தடும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் பருத் தித்துறை பிரதேசசபை எச் சரிக்கை விடுத்துள்ளது. (25)

போஷாக்கு நிலை விபரம் யுனிசெவ் நிறுவனம் கோரியது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டஅதிருகாம் களின் போஷாக்கு நிலைமை கள் பற்றிய விபரங்களை யுனி செவ் நிறுவனம்கோரியுள்ளது.

மேற்படி நிறுவனம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அர சசார் பற்ற நிறுவனங்களின் இணையதிற்கு விடுத்துள்ள இவ் வேண்டுகோளில் யாழ். மாவட்டத்தில் உள்ள அதி முகாம்களின் விபரங்கள், அங் குள்ள சிறுவர்களின் போஷா க்கு நிலைமைகள், முகாம்களை பராமரிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் விபரங்கள் ஆகியவற்றை தமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளது. இதேவேளை மேற்படி நிறுவ னம் 1993 இல் உதவி வழங்கும் நாடுகளில் வடசிலையும் சேர்த் துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

கப்பல்மூலம் கொழும்பு செல்லும் நோயாளரை எதிர் வரும் 9 ஆம் திகதி கொழும் புக்குக் கொண்டுசெல்வதற்கு ஏற்பாடு நடைபெறுவதாக வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

குடாண கப்பலிலிருந்து பொருள்கள் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் இறக்கப் படும் என எதிர்பார்த்தே இந்த ஏற்பாடு நடைபெறுவ தாக வைத்தியசாலை அதி காரி தெரிவித்தார்.

தற்கொலை

(வடமராட்சி)

உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றது.

சைக்கிள் கடையில் வேலை செய்துவந்த சிவனையா நந்த குமார் [வயது 18] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

இவரது மரணம் சம்பந்த மாக மரண விசாரணை அதி காரி திரு. வீ. நடராசா தற் கொலையெனத் தீர்ப்பு வழங் கினார். (யோ)

புதிய தொழுநோயாளர் 93 பேர் கண்டுபிடிப்பு

யாழ். மாவட்டத்தில் கட ந்த 1992-ம் வருடத்தில்மேற் கொள் ளப்பட்ட தொழுநோய் ஆய்வு களில் போது 93 புதிய தொழு நோயாளர்கள் கண்டு பிடிக் கப்பட்டனர்.

யாழ். மாநகரசபைப் பகு தியிலும் தீவகப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து தஞ்சமடை ந்திருக்கும் கேப்பாலி அதி முகாமிலும் புதிய தொழு நோயாளர் கண்டு பிடிக்கப் பட்டனர்

அடுத்த வாரம் திருத்தம்

[கொழும்பு]

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்ட க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்கள் எதிர்வரும் பதின்மூன்றாம் திகதி முதல் மட்டக்களப்பிலும் கொழும்பிலும் வைத்து திருத்தப்பட விருப்பதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது ஏனைய மாவட்டங்களில் நடந்த பரீட்சைகளின் விடைத்தாள்கள் திருத்தும் வேலை முடிவடைந்து விட்டது தெரிந்ததே.

பௌதிகதுறையில் மாணவர் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத்துறையில் உள்ள மாணவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி துறையில் 70 வெற்றிடங்கள் உள்ளதாகவும் இவை விரைவில் நிரப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளதாக அவ்வட்டாரங்களிலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்கலைக்கழகத்தில் பௌதிகத்துறையில் உள்ள விரிவுரையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக வெளிவந்த செய்தி தவறானது என அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆதாரம் காட்டி பெறலாம்

திருஷ்ணபிள்ளைசின்னம்மா என்பவரது தேசிய அடையாள அட்டையு அவரது 74992 எனும் இலக்கத்தைக் கொண்ட வடபகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டும் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் வரித்தப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

★ ★ ★

கடந்த 28-1-93 இல் சாவகச்சேரி டிஸ் நிலையத்தை அண்மையபிரதான வீதியில் சிறு தொகைப் பணத்தினை சரசாலை வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் திரு ந. புஷ்பரிந்திரன் கண்டெடுத்துள்ளார்.

தவறவிட்டவர்கள் யா/நுணாவில் இறக்கு அமிர்தாயபிளை

கேணல் கிட்டு நினைவு திருப்பலியும் ஆராதனையும்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் துரோகச் செயினால் பலியாகிய கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளது நினைவாக நேற்றுக்காலை 7.00 மணியளவில் யாழ் அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலிப் பூசையும், ஆராதனையும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர்.

கல்வித் திணைக்களத்தில் பத்திரிகைச் சபை

யாழ். கல்வித்திணைக்களத்தில் செய்திவெளியீடு தொடர்பாகப் பத்திரிகைச் சபையொன்று கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்படவுள்ளது. எனத்தெரியவருகிறது இந்தச் சபையில் கல்வித்திணைக்களத்தைச்சேர்ந்த மூன்று மூத்த அதிகாரிகள் அங்கம் வகிப்பார்கள்

கல்வித் திணைக்களச் செய்திகள் மற்றும் அறிக்கைகள் இச் சபையின் ஊடாகவே தொடர்புச் சாதனங்களுக்கு வழங்கப் படவுள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்

சென்ற வருடம் யாழ் மாவட்டப் பாடசாலைகளில்உள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டது போன்று இவ்வருடமும் நியாய விலையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு உதவியாகசகலகோட்டங்களிலும் ஆண்டு 1தொடக்கம் ஆண்டு 13 வரை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைகுறிப்புரீதியாகவும் தேவைப்படும் கொப்பிகளின் வகைகளைப் பற்றிய தரவுகளையும் தமக்கு 8-02-93 க்குமுன் தத்தமதுவலய சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ். பிரதேச கல்விப் பணிப் பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். [17]

பாடசாலை உபகரணம் வழங்கல்

(கருநகர்)

இடம்பெயர்ந்து தற்பொழுது கருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கு எல்லைக்குள் வதியும் மாணவர்களுக்கு யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் இயக்குநர் வண. இ. ஜ. ஜெபரட்ணம் அடிகளார் உதவியாக வழங்கியுள்ள பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

பங்குத்தந்தை வண பி. எம் இம்மனுவேல் அடிகளார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நடுநிலையம் பாடசாலை உபகரணங்களுடன் சிறு தொழிற்சாலைகளுக்கான கல்டோஜர் மாதிரி வகைகளையும் இடம் பெயர்ந்தவர்களுக்குக்கொடுத்து உதவியுள்ளது. (21)

பிற்போடப்பட்டது

அரசின் நடவடிக்கையால் வன்னியில் மக்கள் அவதி

சிறிலங்கா அரசு தொடர்ந்து கடைப்பிடித்துவரும் வேண்டாதகாத செயற்பாடுகளால் தமிழீழப் பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் இன்னல்களையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றார்கள் இவாவிக் கடலில் நடாத்தும் மனித வேட்டை, பொருளாதாரத் தடை காரணமாக வவுனியாவிலிருந்து பூநகரி வரை பிரயாணிகள் நீண்ட நாட்களாக சொல்லொணாத் துன்பத்தையனுபவித்து வருகிறார்கள். உண்ண உணவின்றி மாற்ற உடையின்றி உறங்க இடமின்றி விளங்குகள் போன்று காலையும் நிலையினை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் மாசிய பொருளாதாரத் தடை வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, பகுதியை பெரிதும் பாதித்துள்ளது. வன்னிப் பிரதேசத்திலுள்ள சகல மருத்துவ மனைகளிலும் மருத்துவகைகளுக்கு பெரிதாக தட்டுப்பாடும் நோயாளர்களுக்கு தேவையான ஊசிகள் இன்றியும் காணப்படுவதால் பலர்கடுமையான நோய்களுக்கு ஆளாகின்றார்கள். பலர் மரணித்துள்ளார்கள். வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் வேகமாக பரவியுள்ளன. மடு இடம் பெயர்ந்தோர் முகாம் உட்பட சகல முகாம்களிலும் கொடிய நோய்களினால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒருவாரம் பிரகடனப் படுத்தப்பட்ட தேவையற்ற ஊரடங்குச் சட்டம் காரணமாக வவுனியா, முல்லைத்தீவு மன்னார் ஆகிய இடங்களில் வாழும் விவசாயிகள் உட்பட சகல தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவு பண்டசாலைகள் இயங்க முடியாமல் உள்ளன. அத்துடன் சிறுவர்களுக்கான பால்மாவும், பயிர்ச்செய்கைக் காலமும் ஆனைகால் மண்ணெண்ணெய் இன்றி விவசாயிகள் அலைந்து திரிவதையும், பயிர் கொடிகள் வாடி வதங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

உற்பத்திப் பொருள்களான நெல், உழுந்து, வெங்காயம், பிற தானியப் பொருள்களைச் சந்தைப் படுத்துவதில் விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்திச்செலவைவிட மிகக் குறைந்த விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் எல்லைப்புறங்களில் விமானப்படை மற்றும் எறிகணைத் தாக்குதல். இராணுவ நடவடிக்கைகளினால் மக்களின் நாளாந்த வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது கடந்த இரண்டாம் திகதி அன்று பகல் ஒரு மணியளவில் ஒமந்தை தென்னிந்திய திருச்சபை றெவர் பாடசாலையில் தங்கியிருந்த பிரயாணிகள் மீது சிறிலங்காவின் விமானப்படை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று ஈய்மார்கள் கொல்லப்பட்டும் 6 பேர்வரை படுகாயங்களுக்கும்உள்ளானார்கள் என்பது வெளிந்ததே கட்டடம் பெரிதும் சேதமாகியது குறிப்பிடத்தக்கது.

முதலுதவிப் பயிற்சி

முதல் பயிற்சி வகுப்பை முடித்த வெளியேறிய மகளிருக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்பு அரசவட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை மூலம் இம்மாதம் 14 ஆம் திகதிமுதல் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதலுதவிப் பயிற்சி வகுப்பில் இணைந்துகொள்ள விரும்பும் யுவதிகள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் தங்களது பெயரை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்படுகிறது. [யோ]

அத்தியாவசிய

சமீபத்த சேவைகள் போன்ற பலவேறு அத்தியாவசிய சேவைகள் சீரற்றதாக உள்ளது

நீண்டகாலமாக சீரற்றிருக்கும் மேற்படி அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் சீரற்ற நிலையில் வைத்துப் வேணுவதற்கு அரசுதிட்டமிடு செயற்படுகிறது.

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதில் அரச அதிகாரிகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது இவ்வாறே எரிபொருள் மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், ஆகியவற்றை அனுப்பி வைப்பதிலும் அரசு மெத்தனமான கப்

சர்வதேச

விக்கப்படுகிறது.

இக்கலூரியில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் மகள், மாணவர் தலைவராக இருப்பதாகவும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் செல்வந்தர்கள் ஆகியோரின் பிள்ளைகளே கல்வி பயில்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி அறிவிக்கப்படவுள்ளதாக நகர, கிராமப்புறங்களில் சுதேச மொழிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கவுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது. ஏழைகளின் கல்வி நிலையை மேம்படுத்த முயற்சி செய்ய

ஐலன்ட்நிறுவனத்தைவாங்க அரச சார்பு முதலாளி முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் சுதந்திர பத்திரிகைகளுக்கு பிரேமதாசா அரசாங்கத்தினால் ஏற்படக்கூடிய நிலைகுறித்து ஆராய நாளை 6 கட்சிகளின் கூட்டமொன்று நடைபெற உள்ளதாக 'ரவய'' பத்திரிகை ஆசிரியர் ஐலன் தெரிவித்தார்.

இதன் பின்னர் 14 எதிர்க் கட்சிகளும் கூடி ஆராய்ந்த பின் கொழும்பு நகரில் ஒரு நாள் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். பத்திரிகையாளர் இலர் மாது செய்யப்படலாம் என ஊகிக்கப் படுவதாகவும் தெரிவித்த அவர் மிச்சாட் டி. சொய்சாவின் மரணத்திற்கு ஜே. வி. பி. மீது பழிபோட்ட அரச தொடர்ந்து என்ன செய்யும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றார்.

இதேவேளை 'ஐலன்ட்' பத்திரிகைக்கு விளம்பரங்கள் நிறுத்தப்பட்டு விடுதாக்கப்பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்படவுள்ளதாகவும் இச் சதிநாச்சுவேலையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசாவும் அவரது நண்பர்களும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பத்திரிகைகளுக்கு விடப்பட்ட அச்சுறுத்தல்களை அடுத்து 'திவயின' பிரதம செய்தியாளர் ராஜினாமா செய்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள

இலவச சீருடைகள் புதனன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகள் எதிர்வரும் புதனன்று விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் இச் சீருடை வழங்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக எதிர்வரும் எட்டாம் திகதி அனைத்துப் பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்து தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். அதேவேளை இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு மேற்படி சீருடை வழங்குவது தொடர்பாக எதுவித ஏற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவருகிறது.

போலிக்கடவுச் சிட்டுகள் மூலம் 3 சிறுவரை

கனடா கூட்டிச் செல்ல முயன்ற பெண் கைது

போலிக் கடவுச் சிட்டுடன் பதினாறு வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளை கனடாவிற்கு கூட்டிச் செல்ல முயன்ற கொழும்பு ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். அதாவது கோட்டை விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றார்.

இவை விரைவில் நிரப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்கலைக்கழகத்தில் பௌதிகத்துறையில் உள்ள விரிவுரையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக வெளிவந்த செய்தி தவறானது என அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆதாரம் காட்டி பெறலாம்

கிருஷ்ணபிள்ளைசின்னம்மா என்பவரது தேசிய அடையாள அட்டையு அவரது 74992 எனும் இலக்கத்தைக் கொண்ட வடபகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டும் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் வர்த்தகப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

★ ★ ★

கடந்த 28-1-93 இல் சாவகச்சேரி டஸ் நிலையத்தை அண்டிய பிரதான வீதியில் சிறு தொகைப் பணத்தினை சரசாலை வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் திரு ந. புகள்சிறீந்திரன் அவர்கள் கண்டெடுத்துள்ளார்.

தவறவிட்டவர்கள் யா/நுணாவில் கிழக்கு அமிர்தாயபிகை வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு, தகுந்த அடையாளத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

உதைபந்தாட்ட லீக் நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவராக மீண்டும் அரியாலை ஐக்கிய கழகத்தைச் சேர்ந்த எஸ். ரி. கணநாதன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பொதுச்செயலாளராகப் பாஷையூர் புனித அன்ரனிஸ் கழகத்தைச்சேர்ந்த எஸ் பிலிப் அன்ரனிப் பிள்ளையும், கௌரவ பொருளாளராக வைக்கிங்ஸ் கழகத்தைச் சேர்ந்த பி. ஆர். தம்பிநாயகமு தெரிவு செய்யப்பட்டார்கள். உபசெயலாளராகப் பாடும் மீன் கழகத்தைச் சேர்ந்த தேவநாயகமும். உபதலைவர்களாக ஆறு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தவிர, யாழ். உதைபந்தாட்ட லீக்கில் இணைந்துள்ள அனைத்து கழகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் நிர்வாக சபையில் அங்கம் வகிப்பர்.

டது போன்று இவ்வருடமும் நியாய விலையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு உதவியாகசகலகோட்டங்களிலும் ஆண்டு 1தொடக்கம் ஆண்டு 13 வரை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்புரீதியாகவும் தேவைப்படும் கொப்பிகளின் வகைகளைப் பற்றிய தரவுகளையும் தமக்கு 8-02-93 க்குமுன் தந்துதவுமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். [17]

பாடசாலை உபகரணம் வழங்கல்

(குருநகர்)

இடம்பெயர்ந்து தற்பொழுது குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கு எல்லைக்குள் வதியும் மாணவர்களுக்கு யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. இ. ம. டைல் அடிகளார் உதவியாக வழங்கியுள்ள பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

பங்குத்தந்தை வண பி. எம் இம்மனுவேல் அடிகளார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நடுநிலையம் பாடசாலை உபகரணங்களுடன் சிறு குழந்தைகளுக்கான லக்டோஜன் பால்மா வகைகளையும் இடம் பெயர்ந்தவர்களுக்குக்கொடுத்துதவியுள்ளது. (21)

பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்களை சேர்த்தல் தொடர்பான நேர்முகப் பரீட்சை மறுஅறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மலேரியா தடுப்பு விளக்கவுரை

(கொழும்புத்துறை)

மலேரியா நோய் பரவாது இருக்க இதுபற்றிய விளக்க விரிவுரை ஒன்றை யாழ்ப்பாணம் மலேரியா எதிர்ப்பு இயக்கத்தின் பிராந்திய மருத்துவ அதிகாரி டாக்டர் கே. எஸ். சிவகுரு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கு வைத்திய நிலையத்தில் நிகழ்த்துவார்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரியால் இச்சொற்பொழிவு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. [24]

ஆசிரியர் ஜவன் தெரிவித்தார்.

இதன் பின்னர் 14 எதிர்க்கட்சிகளும் கூடி ஆராய்ந்த பின் கொழும்பு நகரில் ஒரு நாள் சத்தியாகிரக போராட்டம் நடத்தப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். பத்திரிகையாளர் சிலர் கைது செய்யப்படலாம் என ஊகிக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் ரிச்சாட் டி. சொய்சாவின் மரணத்திற்கு ஜே வி. பி. மீது பழிபோட்ட அரசு தொடர்ந்து என்ன செய்யும்

பலத்த நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப் பத்திரிகையை விலைக்கு வாங்கிவிட இரண்டு அரசாங்க சார்பு முதலாளிகள் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது மேலும் பத்திரிகைகளுக்கு விடப்பட்ட அச்சுறுத்தல்களை அடுத்து 'திவயின' பிரதம செய்தியாளர் ராஜினாமா செய்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலவச சீருடைகள் புதனன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகள் எதிர் வரும் பத்தாம் திகதி வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் இச் சீருடை வழங்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக எதிர்வரும் எட்டாம் திகதி அனைத்து பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்து தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். அதேவேளை இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு மேற்படி சீருடை வழங்குவது தொடர்பாக எதுவித ஏற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிய வருகிறது.

போலிக்கடவுச் சீட்டுகள் மூலம் 3 சிறுவரை

கனடா கூட்டிச் செல்ல முயன்ற பெண் கைது

போலிக் கடவுச் சீட்டுடன் பதினாறு வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளை கனடாவிற்கு கூட்டிச் செல்ல முயன்ற பெண்மணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இப்பெண்மணி தனது பிள்ளைகள் எனக்கூறி பதினாறு வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளை கனடாவிற்கு கூட்டிச் செல்ல முயன்ற போதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றார்.

வதிவிட

மத்திக்குத் தேவையான பல பெறுமதிமிக்க பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகங்கள், வட்ட இணைப்பாளர் அலுவலகங்கள், சமநலச்சேவை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் யாழ் மாவட்டச்செயலகம், வட்ட இணைப்பாளர் அலுவலகங்களுக்கு எதிர்வரும் 15-02-93 நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்புமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

சந்திப்பு

உணவு விநியோகம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பற்றாக் குறை சம்பந்தமாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் அரச அதிபரைச் சந்தித்து உரையாடவுள்ளார்கள். இச்சந்திப்பு எதிர்வரும் செவ்வாய் பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாலியல்

இதேவேளை பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒருவருக்கு நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் சுழிபுரம் சந்தியில் வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்தவரும் பின்னர் தொல்புரம் பத்தானைக் கேணியடியில் வசித்து வந்தவருமாகிய, நான்கு பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து பொன்னுத்துரை (வயது 46), என்பவர் எட்டு வயதுச் சிறுமியைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதற்காக விடுதலைப் புலிகளால் அதி உயர் தண்டனையான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சகல முகாம்களிலும் கொடிய நோய்களினால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒருவாரம் பிரகடனப்படுத்தப்பட்ட தேவையற்ற ஊரடங்குச் சட்டம் காரணமாக வவுனியா, முல்லைத்தீவு மன்னார் ஆகிய இடங்களில் வாழும் விவசாயிகள் உட்பட சகல தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவு பண்டசாலைகள் இயங்க முடியாமல் உள்ளன. அத்துடன் அறுவடைக்காலமும், பயிர்ச்செய்கைக் காலமும் ஆனமையால் மண்ணெண்ணெய் இன்றி விவசாயிகள் அலைந்து திரிவதையும், பயிர் கொடிகள் வாடி வதங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

சர்வதேச

விக்கப்படுகிறது.

இக்கல்லூரியில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் மகள், மாணவர் தலைவராக இருப்பதாகவும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் செல்வந்தர்கள் ஆகியோரின் பிள்ளைகளே கல்வி பயில்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படவுள்ளதால் நகர, கிராமப்புறங்களில் சுதேச மொழிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. ஏழைகளின் கல்வி நிலையை மேம்படுத்த முயற்சி செய்வதாக கூறும் பிரேமதாசா அரசாங்கம் சர்வதேச பாடசாலைகளை நிறுவி ஏழைமக்களிற்கு பாதிப்பு ஏற்படுத்த முயல்வதாக கொழும்பு பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன.

நிவாரண

என்ற கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டதுமே மேற்படி நிவாரண விநியோகத்தை முழுமையாக மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

குதலின் மூன்று சயமச்சர்கள் கொல்லப்பட்டும் 6 பேர்வரை படுகாயமடைவதற்கும் உள்ளானார்கள் என்பது தெரிந்ததே கட்டடம் பெரிதும் சேதமாகியது குறிப்பிடத்தக்கது.

முதலுதவிப் பயிற்சி

தையல் பயிற்சி வகுப்பை முடித்து வெளியேறிய மகளிருக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்பு கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை மூலம் இம்மாதம் 14 ஆம் திகதிமுதல் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதலுதவிப் பயிற்சி வகுப்பில் இணைந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் தங்களது பெயரை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்படுகிறது. [யோ]

அத்தியாவசிய

சார்ந்த சேவைகள் போன்ற பல்வேறு அத்தியாவசிய சேவைகள் சீரற்றதாக உள்ளது

நீண்ட காலமாக சீரற்றிருக்கும் மேற்படி அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் சீரற்ற நிலையில் வைத்துப் பேணுவதற்கு அரசு திட்டமிட்டு செயற்படுகிறது.

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதில் அரசு அதிக கெடுபிடி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறே எரிபொருள் மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், ஆகியவற்றை அனுப்பி வைப்பதிலும் அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்களுக்கூடாக மட்டுமல்ல அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களுக்கூடாக மாவட்டத்திற்குள் எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருள்களையும் அரசு திட்டமிட்டு கட்டுப்படுத்துவதாகவும். பல அத்தியாவசிய பொருள்களுக்கு முற்றாகத் தடை விதித்துள்ளதாகவும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவித்தனர். (சு)

உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

06-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8213

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

26 8051, 24-1685, 26-2668, 27-9489, 24-4238.
24 3364, 27-1122, 41-9855, 42-9345, 24-8631.
26 4885, 24 6475, 28-9917, 26-5517, 42-2'51.
26-6526, 41-5178, 26-5302, 24-2493, 24-2496.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 81 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.